தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Tamilmanam International Research Journal of Tamil Studies
An Internationally Peer-Reviewed, Open Access Monthly Journal
eISSN: 3049-0723 pISSN: 3107-7781
Vol. 4 Issue: 03 December 2025
DOI: https://doi.org/10.63300/tm040312

# Educational thoughts expressed in the works of V.Iraianbu

**Dr P. Vignesh kumar,**

Assistant Professor of Tamil, S.A. College of Arts and Science, Chennai - 600 077, Tamilnadu, India.

Email: vikki6493@gmail.com, ORCiD: https://orcid.org/0009-0009-1773-6579

**Abstract:**

Human Emotions and Excellence in the writings of V. Iraianbu Preface Every individual plays a significant role in transforming their society into a desirable one. Education must aim to spread humanity among people. It is the key to helping them understand and engage with their own society. To eradicate inequalities from society, quality education is essential. With these concerns in mind, various scholars have emphasized the importance of education throughout different periods. After independence, the Indian government established various organizations and provided them with financial support under the goal of "Education for All." In this context, in recent years, V. Iraianbu has expressed several rational thoughts on contemporary education. This article explores V. Iraianbu's views on education as reflected in his writings.

**Keywords:** *society, humanity, financial support, goal, Education.*

***References:***

[1] V.Iraianbu – Daricanam, Vijaya Patippakam, Coimbatore – 641 001, First Edition – 2018

[2] V.Iraianbu – Alako Alaku, New Century Book(B) Litt, Ambathur Chennai – 600098, Seventh Edition – 2019.

[3] V.Iraianbu – Vaikai Minkal, Vijaya Patippakam, Coimbatore – 641 001,First Edition – 2020

[4] R.Saravanamuthu Katral Karpittal Saradha Patippakam, Chennai – 600014 , Sixth Edition – 2014.

[5] S. Murugan, Vetri Tarum Mantiram, Vikatan Publication 757, Anna Calai, Chennai – 600002 , 13th Edition November - 2016.

**Author Contribution Statement**: NIL.

**Author Acknowledgement**: NIL.

**Author Declaration**: I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

**License**

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

# வெ.இறையன்பு படைப்புகளில் காணலாகும் கல்வி குறித்தான சிந்தனைகள்

*** முனைவர் பா. விக்னேஷ்குமார்,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,

எஸ்.ஏ.கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சென்னை-600 077, தமிழ்நாடு, இந்தியா.

## 1. ஆய்வுச் சுருக்கம் (Abstract)

ஒவ்வொரு தனிமனிதனும் தங்கள் சமூகத்தை விரும்பத்தக்க ஒன்றாக மாற்றுவதில் முக்கியப் பங்கு வகிக்கிறான். கல்வி என்பது மக்களிடையே மனிதநேயத்தைப் பரப்புவதை நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும். இது அவர்கள் தங்கள் சமூகத்தைப் புரிந்துகொள்வதற்கும், அதில் ஈடுபடுவதற்கும் உதவும் திறவுகோலாகும். சமூகத்திலிருந்து ஏற்றத்தாழ்வுகளை ஒழிக்க, தரமான கல்வி அவசியம். இந்தக் கவலைகளை மனதில் கொண்டு, பல்வேறு அறிஞர்கள் வெவ்வேறு காலகட்டங்களில் கல்வியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியுள்ளனர். சுதந்திரத்திற்குப் பிறகு, இந்திய அரசாங்கம் "அனைவருக்கும் கல்வி" என்ற இலக்கின் கீழ் பல்வேறு அமைப்புகளை நிறுவி, அவற்றுக்கு நிதியுதவி அளித்தது. இந்தச் சூழலில், சமீபத்திய ஆண்டுகளில், வி. இறை அன்பு சமகாலக் கல்வி குறித்த பல பகுத்தறிவுமிக்க எண்ணங்களைப் பகிர்ந்துள்ளார். இந்தக் கட்டுரை, வி. இறை அன்புவின் எழுத்துக்களில் பிரதிபலிக்கும் கல்வி குறித்த அவரது பார்வைகளை ஆராய்கிறது.

**முன்னுரை**

சமுதாயத்தை ஆக்கப்பூர்வமான வழியில் கொண்டு செல்ல தனி மனிதனின் பங்கு முக்கியமானதாகும். தனிமனிதனை மனிதநேயம் உடையவனாக மாற்றும் தன்மையுடையதாகக் கல்வி அமைய வேண்டும். அக்கல்வியே ஒரு மனிதன், உலகத்தைப் பற்றி தெரிந்து கொள்ள உதவுகிறது. சமுதாயத்தில் உள்ள ஏற்றத் தாழ்வுகளைப் போக்குவதற்கு தரமான கல்வியை அனைவருக்கும் வழங்க வேண்டும். இதனை உணர்ந்தே ஒவ்வொரு காலகட்டத்திலும் சான்றோர்கள் கல்வியின் தேவைகளை வலியுறுத்தியுள்ளனர். நாடு விடுதலை அடைந்த பிறகு அனைவருக்கும் கல்வி கொடுக்க வேண்டும் என்பதற்காக அரசாங்கம் பல்வேறு அமைப்புகளை ஏற்படுத்தி செயலாற்றி வருகிறது. தற்காலத்தில் வெ.இறையன்பு அவர்கள் கல்வி குறித்தான கருத்துக்களைத் தன்னுடைய படைப்பின் வாயிலாக வெளிப்படுத்தி வருகிறார். அவர் தன்னுடைய படைப்புகளில் கல்வி குறித்தானச் சிந்தனைகளை எவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார் என்பதைப் பற்றி ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**குறிப்புச் சொற்கள் :** சமுதாயம், மனிதநேயம், நிதி உதவி, இலக்கு, கல்வி,

**கல்வி சொற்பொருள் விளக்கம்**

கல்வி என்பதைக் கல்லுதல் என்பர். கல்வி என்ற பதம் கவ்வுதல் அல்லது வளர்ச்சியடையச் செய்தல் என்றும், கல்வி என்பதற்குக் கற்பித்தல் அல்லது பயிற்றுவித்தல் என்ற மற்றொரு பொருளும் உண்டு. கல்லுதல், கிளைத்தல், தோண்டுதல், துருவுதல், என்னும் வினைக் குறிப்புகளால் கல்வி வழங்கப்படுகிறது.

**மன்னர் மக்களாட்சியில் கல்வி**

மாணவர் என்னும் சொல் ஆண், பெண் இருவருக்கும் பொதுவான சொல். நன்னூலார் மாணாக்கர் என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். ஆகையால் மாணவர் என்ற சொல் பழங்காலத்திலிருந்தே வழக்கத்திலிருந்திருக்க வேண்டும். அதற்கு, குறுந்தொகையும் சான்று தருகிறது. அதனை ‘அன்ன இவன் ஓர் இளம் மாணாக்கன்’ என்கிறது.

முற்காலத்தில் கல்வி ஒருசில இனத்தைச் சார்ந்தவர்கள் கற்பதற்குரியதாக இருந்தது. ஆனால் தற்காலத்தில் அனைவருக்கும் கல்வி கற்கும் வாய்ப்பு கிடைத்துள்ளது. பணம் உடையவர்களின் கல்வியானது மூன்று வயதிலேயே தொடங்குகிறது. பணமற்றவரின் கல்வியானது ஐந்து வயதில் தொடங்குகிறது. ஆனால் அரசாங்கம் பணம் இருப்பவர் இல்லாதவர் என அனைவருக்கும் கல்வி கொடுக்கிறது. பணம் இல்லாதவருக்கு உதவித் தொகை கொடுத்து கல்வியைப் பயிற்றுவிக்கிறது. தற்காலம் மக்களாட்சி காலம் என்பதால் அனைவரும் கல்வி கற்கும் உரிமையுடையவர்களாக உள்ளனர்.

**படிப்பவர்களின் வகைகளும் அவர்களின் நோக்கமும்**

ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு திறமையுடன் படைக்கப்படுகிறான். மனிதனுக்கு மனிதன் தேவைகளும் மாறுபடுகிறது. ஒரு மனிதனின் திறமை மற்றொரு மனிதனிடம் இருப்பதில்லை. ஒரு வகுப்பில் உள்ள மாணவர்கள் அனைவரின் நோக்கமும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. ஒரு வகுப்பில் அனைத்து மாணவர்களும் ஒரே பாடத்தைப் பயில்பவர்களாக இருந்தாலும் அவர்களின் நோக்கம் மாறுபட்டதாக உள்ளது என்பதை இறையன்பு,

> **“மதிப்பெண்ணுக்காகப் படிப்பவர் சில பேர்**
> **மதிப்புக்காகப் படிப்பவர் சில பேர்**
> **பதவிக்காகப் படிப்பவர் சில பேர்**
> **பரிசுக்காகப் படிப்பவர் சில பேர்.”**
>
> **(தரிசனம், ப.63)**

என்கிறார். நன்றாகப் படித்து நல்ல மதிப்பெண் பெற வேண்டும் என்பதற்காக ஒரு சிலரும், என்னிடம் நிறையச் செல்வம் உள்ளது, கல்வி கற்பதால் சமுதாயத்தில் ஒரு மதிப்பு ஏற்படுகிறது என்பதால் மதிப்புக்காகச் சிலரும், நன்றாகப் படித்து முடித்தால் அந்த கல்வியின் வாயிலாக ஒரு பதவியைப் பெறலாம் என்பதற்காக ஒரு சிலரும், நன்றாகப் படித்து தேர்வில் முதல் மதிப்பெண் எடுத்தால் பரிசும் பாராட்டும் கிடைக்கும் என்பதற்காக ஒரு சிலரும் படிக்கிறார்கள். மாணவப் பருவம் என்பது மிக மகிழ்ச்சிக்குரியதும் கற்றலுக்குரிய பருவமும் ஆகும். ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது என்னும் சான்றோர் வாக்கிற்கு இணங்க மாணவர்கள் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்து கல்வி கற்பதற்குரிய பருவமாகவும் மாணவப்பருவம் திகழ்கிறது.

**மாணவப் பருவம்**

மாணவப் பருவம் என்பது கல்வியறிவினைப் பெறுவதற்குத் தகுந்த பருவமாகும். அப்பருவத்தில் குழந்தையின் மனம் அனைத்தையும் எளிதில் பற்றிக் கொள்ளும் விதம் இருப்பதால், அப்பருவத்தில் முறையான கல்வியைக் கற்றுக் கொடுக்க வேண்டும். அவ்வாறு கற்றுக் கொடுக்கும் போது குழந்தைகள் நல்ல பழக்க வழக்கங்களைக் கற்றுக் கொள்கிறார்கள். அப்பருவத்தில் முறையாகக் கல்வி கொடுக்கவில்லை எனில் பிற்காலத்தில் நல்ல பழக்க வழக்கங்களைக் கற்பதில் அக்குழந்தைகள் சிரமப்படுகிறார்கள். ஒருவர் சிறந்த மனிதனாக உருவாவதற்கு அடித்தளமாக அமையும் பருவம் மாணவப் பருவம். அதனைத் “தெரிந்து கொள்ளுதலிலும் மறந்து விடுவதிலும் இடையில் தங்கிப் போனவை, அவனது ஊக்கத்திற்கும் விளையாட்டிற்கும் வாழ்தலுக்கும் உதவியாக அமைகின்ற காலம்தான் கற்றல் காலம். இந்த கற்றல் நிகழும் பருவத்தையே மாணவப் பருவம்” என்று சொல்லலாம் (கற்றல் கற்பித்தல், ப.65) என்கிறார் இரா.சரவணமுத்து அவர்கள்.

ஒரு குழந்தை நன்றாகக் கல்வி கற்பதற்கான வழியினை அமைத்துத் தருவது தொடக்கக் கல்வி. அத்தொடக்கக் கல்வி மாணவர்கள் அனைவரும் மிகுந்த மகிழ்ச்சியுடன் கற்கும் வண்ணம் அமைய

வேண்டும். அப்பருவம் மாணவர்கள் எந்த ஒரு பாகுபாடுமின்றி அனைவரும் சமம் என்று கருதும் பருவமுமாகும். அப்பருவத்தில் ஆசிரியர்கள் மாணவர்களிடம் மனிதநேயம், நாட்டுப்பற்று, தனித்திறமை, என்பனவற்றை விதைப்பவர்களாகத் திகழவேண்டும். அம்மாணவப் பருவத்தை இறையன்பு,

**"ஆணவமற்ற மனிதர் மட்டுமே**
**மாணவராகும் தகுதியைப் பெறுவார்;**
**மாணவராக இறுதிவரையில் இருப்பவரே**
**மனிதராவார்."**

**(தரிசனம், ப.62)**

என்னும் வரிகளில் ஆணவமற்றவர்கள் மட்டுமே மாணவர்கள் ஆவதற்குத் தகுதியுடையவர்கள் என்றும், ஆணவம் உடையவர்கள் மாணவர்கள் ஆகார் என்றும் ஆணவமற்றவர்களாக வாழ்வின் இறுதிவரை வாழ்பவர்களே நன்மனிதர்கள் என்கிறார். அதனை இரா.சரவணமுத்து அவர்கள், "ஒரு குழந்தை பிறந்தது முதல் தான் பெற்ற அறிதலை விடுத்து, புரிதல் நிகழும் பருவத்தில் புதியனவற்றைக் கற்றுக் கொள்ளும் பருவமே மாணவப் பருவம்" (கற்றல் கற்பித்தல், ப.69) என்கிறார். மனிதன் ஒவ்வொரு பருவத்திலும் நற்பண்பு நலன்களைக் கற்றுக் கொள்ளுபவனாகவும், சிறந்த நூல்களைப் படிப்பவனாகவும் இருக்கவேண்டும். அவரே சிறந்த மனிதர் ஆவார் என்ற கருத்தும் வெளிப்படுகிறது.

கற்றது கையளவு கல்லாதது உலகளவு என்று கருதி மாணவர்கள் கற்பதில் ஆர்வமுடையவர்களாக இருக்க வேண்டும். அவ்வாறு கருதி கல்வி கற்கும் மாணவர்களிடம்தான் மாணவர் என்ற மனநிலை ஏற்படுகிறது. அவ்வாறு கருதாதவர்களிடம் ஆணவம் மட்டுமே மீதமிருக்கும் என்பதை இறையன்பு,

**"கற்றுக் கொள்வது தொடரும்போது**
**மாணவ மனநிலை சாத்தியமாகும்**
**எல்லாம் தெரியும் என்றே இருந்தால்**
**ஆணவம் மாத்திரம் பாத்திரமாகும்."**

**(தரிசனம், ப.62)**

என்கிறார். மாணவர்கள் எனக்கு எல்லாம் தெரியும் என்று இருத்தல் என்பது மடமைத் தன்மை. அது அவர்களிடம் நல்ல மனநிலையை ஏற்படுத்தாது. மாறாக, அவர்களிடம் தீமைதரக் கூடிய தன்மையை ஏற்படுத்தும். மாணவர்கள் கற்பதற்கு இன்னும் நிறைய இருக்கிறது என்ற சிரத்தையுடன் தொடர்ந்து கற்பதில் ஆர்வம் உடையவர்களாகத் திகழ வேண்டும்.

**கல்லூரிப் பருவம்**

பள்ளிப் பருவத்திலிருந்து கல்லூரிப் பருவம் என்பது மாறுபட்டது. ஒரு சில மாணவர்கள் பள்ளிகளிலேயே தனது குறிக்கோளை நிர்ணயித்துக் கொண்டு அதனை அடையும் பொருட்டு பள்ளிக்குச் செல்கிறார்கள். ஒரு சில மாணவர்களுக்கு கல்லூரிகளே குறிக்கோள்களை அமைத்துக் கொள்ளும் சூழலை ஏற்படுத்தித் தருகிறது. அதனை இறையன்பு,

**"அவன் பாறையாய் இருந்தான்**
**கல்லூரி அவனை செதுக்கியது."**

**(வைகை மீன்கள், ப.62)**

என்கிறார். கல்லூரிப் பருவம் படிப்பில் அதிக கவனம் செலுத்த வேண்டிய பருவம். மாணவர்கள் பல்வேறு புறத் தூண்டுதல்களுக்கு ஆளாகும் பருவமுமாகும். மாணவர்கள் புறத் தூண்டுதல்களுக்குத் தன்னை ஆட்படுத்தாது படிப்பில் கவனத்தைச் செலுத்தி உழைப்பவர்களே சாதனையாளர்களாகத் திகழ்வர். அதற்குக் கல்லூரியின் பங்கு மகத்தானது. கல்லூரி சிறந்த மாணவர்களை உருவாக்கும் விதம் செயல்படுவதுடன் அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும்.

**தற்கால கல்வி**

தற்காலத்தில் கல்வி பற்றிய விழிப்புணர்வு கடைக்கோடியில் இருக்கக்கூடிய மக்களுக்கும் ஏற்பட்டுள்ளது. பெற்றோர்கள் அனைவரும் தங்கள் குழந்தைகள் அறிவுடையவர்களாகவும், நன்கு கற்றுத் தேர்ந்தவர்களாக விளங்க வேண்டும் என்பதற்காக, குழந்தைகளிடம் வயதுக்கு மீறிய கல்வியினைத் திணிக்கிறார்கள்.

தற்காலத்தில் இருவகையான கல்வி நிலையைப் பார்க்கிறோம். பணம் உள்ளவர்கள் தனியார்ப் பள்ளிகளில் பணம் செலுத்தித் படிக்கிறார்கள். ஏழை மக்கள் அரசுப் பள்ளிகளில் படிக்கிறார்கள். இவ்வாறு இரு நிலைகளில் கல்வி பயிலும் சூழல் ஏற்பட்டுள்ளது. ஒரு சிலர் கல்வி கற்க வேண்டும் என்பதற்காக வெளி இடங்களுக்குச் சென்று விடுதியில் தங்கி, கல்வி கற்பதையும் பார்க்கிறோம்.

பணத்தை வைத்திருப்பவர்களைவிட கல்வி கற்றவர்களாகவும், தேர்ந்த சிந்தனையாளர்களாக விளங்குபவர்களுக்கு மதிப்பு கூடுதலாகக் கொடுக்கப்படுகிறது. இதன் பொருட்டு அனைத்து தரப்பு மக்களும் கல்வி கற்பதற்குச் செல்வதால். கல்வியை விலை கொடுத்து வாங்க வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. செல்வத்தை விட கல்வியே கௌரவத்தைத் தரும் என்ற எண்ணம் மக்களிடம் நிலவி வருகிறது. அதனை இறையன்பு,

**“பணத்தினால் கிடைக்காத கௌரவம்**
**படிப்பைத் தருவதால் கிடைப்பதால்**
**வர்த்தகர்கள் இப்போது**
**கட்டாயம் கவனம் செலுத்துவது கல்வித்துறையில் தான்.**
**வர்த்தகத்தில் கலப்படம் செய்யும்**
**இவர்கள் நுழைந்ததால்**
**கல்வியிலும் வர்த்தகம்.”**

**(வைகை மீன்கள், ப.15)**

அனைவரும் கல்வியை ஆர்வமாகக் கற்கிறார்கள். பொருளாதாரத்தில் மட்டும் கலப்படம் செய்து பொருள் ஈட்டுபவர்கள், கல்வித்துறையில் நுழைந்ததால் கல்வியும் வர்த்தகமாக மாறியுள்ளது. இதனைப் பயன்படுத்தி வர்த்தகர்கள் அதிகப்படியான பொருளீட்டுகிறார்கள்.

கல்வி கற்றுத் தரும் பள்ளிகளை பண்ணை நடத்தி பணம் ஈட்டியவர்கள் நடத்த ஆரம்பித்துள்ளனர். தனியார் பள்ளிகளுக்கு, பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை அனுப்பி அவர்களின் படிப்பில் அதிக கவனம் செலுத்துகிறார்கள். அதனை ஆசிரியர்,

**“பண்ணை நடத்தியவர்கள் சிலர்**
**பகுதி நேரத் தொழிலாகப்**
**பள்ளி நடத்த ஆரம்பித்ததால்**
**கல்வி கறிக்கோழி வளர்ப்பது போலவே**
**கண்காணிக்கப்படுகிறது.”**

**(வைகை மீன்கள், ப.134)**

என்கிறார். கல்வியின் தற்கால நிலையை எடுத்துக்காட்டுவதாக இவ்வரிகள் அமைந்துள்ளன. கல்வியினைப் பற்றி நன்கு கற்றுத்தேறாதவர்கள் அவர்களிடம் உள்ள செல்வத்தைக் கொண்டு பள்ளிகளை ஏற்படுத்துகிறார்கள். அவர்கள் பொருளீட்டும் நோக்குடன் பள்ளிகளை அமைப்பதால் கல்வி என்பது தற்காலத்தில் விற்கப்படும் பொருளாக மாறி உள்ளது என்பது வெளிப்படுகிறது.

பெற்றோர்களும் கல்வி நிறுவனங்களும் குழந்தைகளின் நிலைமையை எண்ணிப் பார்ப்பதில்லை. அவர்களின் எண்ணங்கள் அனைத்தும் குழந்தை அதிக மதிப்பெண் பெற வேண்டும் என்பதே. அதற்காக அவர்களின் வயதையும் பொருட்படுத்தாது, வயதுக்கு மீறிய கல்வியினையும், செயல்பாடுகளையும் தற்காலத்தில் குழந்தைகளிடம் திணிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. அதனை இறையன்பு,

**"அறிவு பற்றிய அக்கறையோ**
**தேடுதல் பற்றிய உணர்வோ**
**இன்றி இயந்திரத்தனமாக நடக்கும்**
**கல்வியின் பாரத்தில்**
**பிஞ்சுக் குழந்தைகளின் மெல்லிய மனம்**
**நசுங்கிச் சாகும் விபத்துக்குப் பெயரே**
**இங்கு படிப்பு."**

**(வைகை மீன்கள், ப.16)**

குழந்தைகளிடம் வயதுக்கு மீறிய கல்வியைத் திணிப்பதால் ஒருபோதும் அக்குழந்தையை அறிவாளியாக மாற்றி விட முடியாது என்பதை உணர வேண்டும். படிப்பதற்காக வேறு எந்த நாட்டிலும் பிஞ்சுக் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்புதல் இல்லை. இங்கு தான் இந்நிலை ஏற்பட்டுள்ளது. இதன் மூலம் குழந்தைகளின் மெல்லிய மனமானது பாதிக்கப்படுகிறது. இந்நிலை குழந்தைகளிடம் ஆரோக்கியமான சூழலை ஏற்படுத்துவதற்கு மாறாக உள்ளது.

பெற்றோர்களும் பள்ளிகளும் ஒன்றை யோசிக்க வேண்டும். ஒன்றை ஒருவரிடம் வலுக்கட்டாயமாகச் செலுத்துவதால் அவர்களை ஒருபோதும் அறிவாளியாக மாற்றிவிட முடியாது. குழந்தைகளின் வயதுக்கு ஏற்ப கல்வி கொடுத்தலே சிறந்த நற்பண்புள்ள மாணவர்களை உருவாக்குவதற்கான வழி.

**நோக்கம்**

ஒவ்வொரு மாணவரும் ஒரு இலக்கினை வரையறுத்துக் கொள்ள வேண்டும். வரையறுத்தல் எவ்வளவு முக்கியமோ அதனை விட முக்கியமானது அதனை அடைவதற்குத் தொடர்ந்து முயற்சிக்க வேண்டும். இன்று உலகில் சாதனையாளர்களாக வாழ்பவர்களும் வாழ்ந்தவர்களின் வரலாற்றையும் பார்த்தால், அவர்கள் தனது நோக்கத்தை அடையும் வரை இரவு பகல் என்று பாராது உழைத்தனர். அதன் பயனாக உலகத்தவர் அனைவராலும் போற்றப்படுபவர்களாக உள்ளனர்.

விருதுநகரில் 1903 ஆம் வருடம் ஜூலை 15ஆம் தேதி பிறந்தவர் காமராஜர். இந்தியாச் சுதந்திரம் அடைந்த பிறகு 1954 ஆம் வருடம் முதல்வராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட போது உயர்கல்வியைக் கூட பயிலாத காமராஜருக்கு எப்படி ஆளுமைத் திறன் இருக்கும் என்று எதிர்க்கட்சிகள் கிண்டல் செய்தனர். ஆனால் காமராஜர் மன உறுதியுடன் செயல்பட்டார். இந்திய அளவில் பெருந்தலைவராகப் போற்றப்பட்டார்.

அச்சமயத்தில் அயல் நாட்டு நிறுவனம் ஒரு தொழிற்சாலையை இந்தியாவில் உருவாக்க வேண்டும் என்று தீர்மானித்தது. அதனைக் காமராஜர் தமிழகத்தில் தான் உருவாக்க வேண்டும் என ஆணையை வாங்கினார். அயல் நாட்டினர் பொருத்தமான இடத்தைத் தேடி தமிழகத்திற்கு வந்தனர். அவர்கள் கேட்ட வசதிக்கு ஏற்ப ஒரு இடத்தையும் தமிழக அதிகாரிகளால் காட்ட முடியவில்லை. செக்நாட்டினர் உரிய இடம் இல்லை எனக் கிளம்பத் தயாரானார்கள். அப்போது "காமராஜர் அவர்களை

அழைத்துச் சென்று வந்த இடங்களை விசாரித்தார். பிறகு படிக்காதவராக இருந்தாலும் தமிழகத்தைப் பற்றி நன்கு தெரிந்திருந்த காமராஜர். காவிரி ஆற்றங்கரையில் திருவெறும்பூர் என்ற ஊர் இருக்கிறதே அந்த இடத்தை காட்டுங்கள் என்று அனுப்பி வைத்தார்." "என்ன ஆச்சரியம்! அந்த இடத்தை பார்வையிட்ட அயல் நாட்டு **வல்லுனர்களுக்கு** அந்த இடம் எல்லா வகைகளிலும் பொருத்தமான இடமாகத் தோன்றியது. அங்கு உருவானது தான், இன்று உலக நாடுகளுக்கு தன் செய்பொருளை ஏற்றுமதி செய்யும் 'பெல்' என்று அழைக்கப்படும் பாரத் கெவி எலக்ட்ரானிக் லிமிடெட் ( BELL) என்ற பெருமை வாய்ந்த நிறுவனம்." (வெற்றி தரும் மந்திரம், ப.20) கல்வி, பணம், பிறருடைய உதவி என எதுவும் இல்லாத காமராஜரின் தன்னம்பிக்கையும் அவரது நோக்கமும் ஒவ்வொரு குழந்தைக்கும் வேண்டும். அத்துடன் இலக்கினை அடையும் வரை தொடர்ந்து உழைக்க வேண்டும். அதனை ஆசிரியர்,

**"தூக்கத்தைக் காட்டிலும்**
**நோக்கம் முக்கியமாக இருந்ததால்**
**அவன் இரவுகளுக்கும் பகல்களுக்கும்**
**இடைவெளி குறைவு.**
**பசித்திருந்ததால் விழித்திருந்தான்**
**விழித்திருந்ததால் தனித்திருந்தான்."**

**(வைகை மீன்கள், ப.38)**

குறிக்கோளை அடைவதற்காக தூக்கத்தைப் பொருட்படுத்தாது இரவு பகலாக உழைத்தான். இங்குப் பசித்திருத்தல் என்னும் சொல் நோக்கத்தை அடைவதற்காக உழைத்தான் என்றும், அதனை அடைவதற்காகப் பிறரிடம் இருந்து தனியாக இருந்தான். தனித்திருந்தான் என்னும் சொல் இலக்கினை அடைய வேண்டும் என்பதற்காக அவன் மேற்கொண்ட செயல்பாடுகள் அனைத்தும் பிறரிலிருந்து வேறுபட்டதாக இருந்தது என்கிறார். குறிக்கோளை அடையும் வரை அயராது உழைத்தலே வெற்றியைத் தரும்.

**ஆங்கிலக் கல்வி**

தகவல்களைப் பரிமாறிக்கொள்ள மொழி ஒரு கருவியாக உள்ளது. ஒரு குழந்தை தாயின் வயிற்றில் எந்த மொழியைக் கேட்கிறதோ அதுவே அக்குழந்தையின் தாய் மொழி. ஒரு குழந்தைக்குத் தாய் மொழிக் கல்வி என்பது அவசியமான ஒன்று. தாய் மொழியிலேயே ஒரு குழந்தை நன்கு சிந்திக்கப் பழகுகிறது. பிற மொழிகளைக் காட்டிலும் ஒருவர் அவரது தாய் மொழியில் சிந்தித்தல் என்பது மிகச் சிறப்பானதாக அமையும். ஒருவன் தன் தாய் மொழியுடன் சேர்த்துப் பிற மொழிகளையும் கற்க வேண்டும். அவ்வாறு கற்பதாலே, தன் மொழிச் சிறப்பையும் பிற மொழியின் கருத்துக்களையும் அறிந்து கொள்ள முடியும். பிற மொழிகளை நன்கு கற்காது தனது மொழியை மட்டும் சிறப்புடையது என்று சொல்வது ஏற்புடையதாக அமைவதில்லை. பல்வேறு மொழிகளைக் கற்றறிந்த பாரதியார்,

**"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்**
**தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்."**

**(பா,க, தமிழ், வ.17.18)**

என்னும் வரிகளில் பாரதியார் தற்கால புத்தம் புதிய கலைகள் பஞ்சபூதச் செயல்பாடுகளின் நுட்பங்கள் கூறும் அறிவியற் கலை நூல்களைத் தமிழ் மொழியில் ஆக்கித் தர வேண்டும் என்கிறார். ஏனெனில் "சொல்லும் திறமை செந்தமிழ் மொழிக்கு உண்டு. சொல்லும் எண்ணமும் முயற்சியுமே தமிழர்களுக்கு வேண்டுவன." (பாரதி ஆய்வுக் கோவை, ப.102) பாரதியார் தன்னுடைய கவிதையில்,

**"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல்**

**இனிதாவது எங்கும் காணோம்"**

**(பா,க, தமிழ், வ.1.2)**

என்னும் வரிகளில் அறிந்த என்ற சொல்லைப் பயன்படுத்துவதிலிருந்து ஒரு மொழியை நன்கு பேசவும் எழுதவும் தெரிந்திருக்க வேண்டும் என்கிறார். பாரதியார் பல்வேறு மொழிகளை அறிந்திருந்தார். அவற்றிலிருந்து தமிழ் மொழியானது இனிமையானது என்கிறார்.

பிற மொழியை கற்றிருத்தலின் பயனையும், கற்காததன் விளைவையும் இறையன்பு,

**"ஒவ்வொரு முறையும்**
**அவன் தமிழில் சிந்தித்து**
**ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து**
**அவஸ்தைப்பட்டான்."**

**(வைகை மீன்கள், ப.60)**

பிற மொழியில் புலமை மிக்கவர்களாக இல்லாவிட்டாலும் பரவாயில்லை. தன் தாய் மொழியுடன் சேர்த்து மற்றொரு மொழியையாவது நன்கு பேசவும் எழுதவும் தெரிந்திருத்தல் வேண்டும் என்கிறார்.

எந்த ஒன்றையும் கற்கத் தொடங்கும் போது அது கடினமாகவே தோன்றும். அதனைக் கற்பதற்கு உரிய வழிமுறைகளைத் தேர்வு செய்து கற்கும் போது எளிமையாக மாறும். அதனை இறையன்பு,

**"ஆங்கிலத்தில் சிந்திக்க ஆழ்மனம் பயில வேண்டும்**
**என்பதால்**
**அன்றாடம் ஓர் ஆங்கில நூலை வாசிப்பான்**
**கடினச் சொற்கள் கால் இடறி விழாமல் இருக்க**
**அகராதித் தூணை அழுத்தமாய்ப்**
**பற்றிக் கொண்டான்**
**ஆரம்பத்தில்**
**அடர்ந்த காடாய் பயமுறுத்திய ஆங்கிலம்**
**பயிலப் பயில**
**அகன்ற தோட்டமாய்த் தோழமை கொண்டது."**

**(வைகை மீன்கள், ப.60)**

ஆங்கிலம் பயிலுதல் கடினமானது என்று நினைத்துக் கற்கும் போது கடினமாகத் தெரியும். நாள்தோறும் ஒரு ஆங்கில வார்த்தையை அகராதியின் துணை கொண்டு கற்கும் போது ஆங்கிலமும் கைவசமாகும். அதற்குப் பயிற்சியும் முயற்சியும் அவசியம்.

**சமுதாயத்தை மேம்படுத்த உதவும் கல்வி**

சமுதாயத்துக்கும் சந்நியாசம் செல்பவர்களுக்கும் கல்வி முக்கியமானதாகும். சன்னியாசம் செல்பவர்களுக்குக் கல்வி அவசியம் இல்லை என்று கருதுதல் தவறு. சன்னியாசம் செல்பவர்கள் எல்லாம் கல்வியில் நாட்டம் இல்லாதவர்கள் என்று எண்ணுகிறார்கள். சந்நியாசம் செல்பவர்களுக்கும் கல்வி என்பது அவசியம் என்பதை, 'தேடல்' என்னும் கதையில் அபி சன்னியாசியிடம் "சுவாமிஜி நானும் உங்களோடு வந்திடறேனே? சரி தம்பி நீங்க உங்க படிப்பை முடிச்சிட்டு வாங்க. நான் உங்களை என்னோட ஆசிரமத்தில் சேர்த்துக்கிறேன். அதுவரைக்கும் என்னோடப் புத்தகங்கள் சிலதை உங்களுக்குத் தரேன் படிச்சுப் பாருங்க அதுக்கப்புறம் இதே உணர்வு இருந்தால் வரலாம்.

சன்னியாசம்னு வந்துட்டா பிறகு படிப்பு எதுக்கு சுவாமிஜி. இல்லை தம்பி பின்னாடி இந்த படிப்பு உங்களுக்கு தேவைப்படும். ஏன் சமூகத்துக்கே தேவைப்படலாம். துறவு முட்டாள்களுக்கான சரணாலயம் அல்ல." (தேடல். அழகோ அழகு, பக்.28.29) என்கிறார். ஒரு கருத்தைப் பிறருக்குச் சொல்வதைக்

காட்டிலும் அதனை எழுத்து வடிவில் பதிவு செய்தாலே காலம் கடந்து வாழ்கிறது. ஞானிகளின் கருத்துக்கள் அவர்கள் எழுதிய நூல்களில் பொதிந்துள்ளது. அதனை முதலில் படிக்க வேண்டும். அக்கருத்துக்களுக்கு மனிதர்களின் மனநிலையை மாற்றும் தன்மை உண்டு. சந்நியாசம் என்பது முட்டாள்கள் செல்வது கிடையாது. அதனைப் பற்றி நன்கு கற்றுத் தேர்ந்தவர்கள் செல்வது. அவர்களுக்கும் கல்வியே வாயிலாக உள்ளது.

**முடிவுரை**

கல்வி மனிதனின் தேவைகளில் ஒன்றாகவும், தனிமனிதன் மற்றும் சமுதாய மாற்றத்தில் முக்கியப் பங்கு வகிப்பதாகவும் உள்ளது. அத்துடன் மாணவப் பருவம் என்பது மிக மகிழ்ச்சிக்குரியதும் கற்றலுக்குரிய பருவம் என்பதையும் தகவல் பரிமாற்றத்திற்கு மொழி ஒரு கருவியாக உள்ளது. அவ்வகையில் ஒரு குழந்தை தாயின் வயிற்றில் எந்த மொழியைக் கேட்கிறதோ அதுவே அக்குழந்தையின் தாய் மொழியாகும் என்பதையும். பணத்தை வைத்திருப்பவர்களைவிட கல்வி கற்றவர்களாகவும், தேர்ந்த சிந்தனையாளர்களாகவும் விளங்குபவர்களுக்கு கூடுதலாகக் மதிப்பு கொடுக்கப்படுகிறது என்பதால் சமுதாய முன்னேற்றத்திற்கும், சந்நியாசம் செல்பவர்களுக்கும் கல்வி முக்கியம் என்பதை அறிய முடிகிறது.

**துணை நூல் பட்டியல்**


1. வெ.இறையன்பு - தரிசனம், விஜயா பதிப்பகம், கோயம்புத்தூர் - 641001. முதல் பதிப்பு - 2018
2. வெ.இறையன்பு - அழகோ அழகு, நியூ செஞ்;சுரி புக் (பி) லிட், அம்பத்தூர், சென்னை - 600098. ஏழாம் பதிப்பு 2019.
3. வெ.இறையன்பு - வைகை மீன்கள், விஜயா பதிப்பகம், கோயம்புத்தூர் - 641001. முதல் பதிப்பு 2020
4. இரா. சரவணமுத்து, - கற்றல் கற்பித்தல், சாரதா பதிப்பகம், சென்னை - 600014. ஆறாம் பதிப்பு, 2014.
5. முருகன், எஸ்.கே. - வெற்றி தரும் மந்திரம், விகடன் பிரசுரம் 757, அண்ணா சாலை, சென்னை - 600002. 13 - ஆம் பதிப்பு, நவம்பர் 2016.


**உரிமம்**

இந்த ஆக்கம், கிரியேட்டிவ் காமன்சு அட்ரிபியூசன் 4.0 சர்வதேச உரிமத்தின் கீழ் உரிமம் பெற்றுள்ளது.